**அகுரஸ்ஸ பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 25 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து அகுரஸ்ஸ பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2016 ஆண்டு முதல் காசேட்டில் காணப்படும் ரூபா 61,881 தொகையான மீதி முன்னைய ஆண்டின் போது திரண்ட நிதியத்திற்கு பதிவழிக்கப்பட்டிருந்ததை மீளாய்வாண்டின் போது சரி செய்திருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும் | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | உடன்படிக்கை வைப்புக் கணக்கில் மற்றும் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பித்திருந்த அட்டவணைகள் இடையே காணப்பட்ட வித்தியாசம் ரூபா 73,800 தொகை கடந்த ஆண்டிலும் இனங்காணாமல் திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் செய்யப்பட்டிருந்ததை மீளாய்வாண்டின் போதும் சரி செய்திருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிர்மாணவேலை கடன்கொடுத்தோர் மீதி ரூபா 977,049 இனால் மிகையாக காட்டப்பட்டுள்ளது. | கடன்கொடுத்தோர் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ளப்பட் டிருக்காத கணக்காய்வுக் கட்டணம் ரூபா 152,214 தொகை மீளாய்வாண்டின் போது கடன்கொடுத்தோர் கணக்கில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (v) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 34,298 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது, | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (vi) | அறுதியாக இனங்காணாமல் நிர்மாண வேலை கடன்கொடுத்தோருக்காக 2014 ஆண்டின் போது ரூபா 1,466,587 இற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடன்கொடுத்தோர் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (vii) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிர்மாண வேலை கடன்பட்டோர் மீதி ரூபா 160,739 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | கடன்பட்டோர் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத் தொகை ரூபா 33,962,434 தொகைக்கான 09 கணக்கு விடயங்கள் உரிய மீதிகள் மற்றும் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப் பட்டுள்ள மீதிகளிடையே, கூட்டுத்தொகை ரூபா 10,682,576 இற்கான சமமின்மைகள் காணப்பட்டன. | உரிய மீதி களில் வித்தி யாசங்களை இணக்கஞ் செய்து கணக் குகளை சரி செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்கீடு செய்யப்பட்டுள்ள மீதி மற்றும் ஆவணப்படுத் தப்பட்டுள்ள மீதிகளிடையே வித்தியாசத்திற்கான காரண த்தை இனங்கண்டு அவற்றை நாட்குறிப்பு மூலம் சரிசெய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|

| | | |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப் படாமையால் கூட்டுத்தொகை ரூபா 79,429,494 தொகைக்கான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது | நிதிக் கூற்றுக் களில் காட்டப் பட்டுள்ள கணக்கு மீதி களை உறுதிப் படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளது வரை யாக்கப்பட்டு பேணப்படு வதற்காக நடவடிக்கை எடுத்தல் மற்றும் உரிய மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்களை சமர்ப்பிக் கின்றேன். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | | | |
| (i) பிரிவுகள் 49 மற்றும் 52 | குறிப்பிட்ட பிரிவின் பிரகாரம் அங்கீகாரமின்றிய நிர்மாண வேலைகள் தொடர்பாக முறை சார் விதமாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் தொடர்பாக எதிர்காலத்தில் வழக்குத் தொடர்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) பிரிவு 150(4) | சபைக்குரிய வருமானங்களை அறவீடு செய்வது தொடர்பாக சபைச் செயலாளரின் கவனம் செலுத் தப்பட்டிருக்கவில்லை. | | தொடர்ந்தும் கொடுப் பனவுகளை புறக்கணிப்ப வர்கள் தொடர்பாக உரிமையை உரித்தா க்குவதற்கு மற்றும் ஆதனங்களை தடைசெய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | விதி 193 | பாதீட்டு மற்றும் குறைநிரப்பு அங்கீகரிக்கப்பட்ட செலவு களுடன் செலவு விடயங்களின் உண்மையான செலவுகளை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பாக காரணங்களைக் காட்டும் கூற்றொன்று கணக்கு களுடன் சமர்ப்பித்திருக்க வில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2019 இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | 2002 நவம்பர் 28 திகதிய ஐஏஐ/ 2002/02 இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணினிகள் துணைக் கருவி கள் மற்றும் மென்பொருள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை யின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2019 ஆண்டு முதல் அந்தப் பதிவேடு நாளது வரை ஆக்கப்பட்டு முறை ப்படி பேணப்படுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஈ) | தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் தபபா/பபாகொ/ 2010/01 சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் 26 நிலத் துண்டுகள் இற்கான மற்றும் 62 கடைளுக்கான உடன்படிக்கைகளை நாளது வரை ஆக்கி இருக்காததுடன் 11 நிலத்துண்டு கடைகள் தொடர்பாக உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை யின் பிரகாரம் செயற்பட வேண்டும். | இந்த நில வாடகை மற்றும் கடை அறைகள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டி ருந்ததுடன் அதன் அறிக்கை மே மாதம் சபை கூட்டத்திற்கு சமர்ப்பித்து சபை தீர்மான த்தின் பிரகாரம் எதிர்கால நடவடிக்கை எடுப்பேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,940,635 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 11,364,504 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 2,012,000 | 2,168,357 | 1,990,568 | 1,547,979 | 2,215,305 | 2,176,276 | 2,072,989 | 1,370,190 |
| வாடகை | 3,600,000 | 3,363,845 | 2,834,789 | 7,337,537 | 3,475,000 | 3,104,391 | 6,889,710 | 6,808,481 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 1,875,000 | 1,717,457 | 1,717,457 | -- | 1,800,000 | 1,528,022 | 1,528,022 | -- |
| ஏனைய வருமானங்கள் | 16,500,000 | 15,740,689 | 9,145,408 | 28,858,469 | 18,000,000 | 11,510,557 | 10,694,640 | 22,263,188 |
| மொத்தம் | 23,987,000 | 22,990,348 | 15,688,222 | 37,743,985 | 25,490,305 | 17,503,329 | 21,185,361 | 30,441,859 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானம் ரூபா 23,987,000 தொகை யாகும். மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 30,441,859 இற்கான நிலுவைத் தொகை மற்றும் சிட்டையிடல் ரூபா 22,990,348 தொகை யுடன் ரூபா 53,432,207 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன் ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 15,688,222 தொகை மாத்திரம் காணப்பட்டமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட நிலுவைத் தொகை ரூபா 37,743,985 ஆகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப் பணம் பிரதான செயலாளரிடம் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித் துள்ளேன். மொத்த நிலுவை வருமானம் மிகவும் உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருப்பது நிலுவை முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் உயர்ந்த பெறுமதி ஆகியவை (42%) யினை கொண்டிருந்த தனாலேயே. |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **(அ) வீதவரி** | | |
| மீளாய்வாண்டிற்கான ஆரம்ப நிலுவை வீத வரி மீதி ரூபா 1,332,189 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 2,276,694 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் மற்றும் மிகைக் கட்டணத்துடன் ரூபா 3,608,863 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 1,977,088 தொகை கொண்டிருந்த மையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 1,631,795 நிலுவை மீதியொன்று காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ஆரம்ப மீதி மற்றும் சிட்டையிடல்களில் 55 சதவீதமாக இருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | ஆதனங்களை தடைசெய்யும் உத்தியோகத்தர்களாக வருமானப் பரிசோதனை உத்தி யோகத்தர்களை அவர்களின் மூலம் நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டுள்ளது. |

**(ஆ) ஏக்கர் வரி**

| | | |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 38,002 தொகையாக காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 15,535 தொகையாகும். ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 13,480 தொகையாகக் காணப்பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 40,057 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள், ஆரம்ப நிலுவையில் மற்றும் சிட்டையிடலில் 25 சதவீதமாகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | ஏக்கர் வரி பதிவேட்டில் காணப்படும் அனேகமான காணித் துண்டுகள் பிரிக்கப்பட்டு ள்ளமையால் ஆதனங்களை இனங்காண்பதற்காக கணிப்பீடு ஒன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கும் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |

### 2.2.4 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **கடை வாடகை** | | |
| | ஆரம்ப நிலுவை ரூபா 6,258,563 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 2,989,379 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடல் மற்றும் மிகைக் கட்டணத்துடன் ரூபா 9,247,942 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 2,545,600 தொகையாக காணப்பட்டமையால், மீளாய்வாண்டு இறுதியில் உள்ள வாறு ரூபா 6,702,342 தொகை நிலுவை மீதியொன்று காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ஆரம்ப மீதியில் மற்றும் சிட்டையிடல் என்பவற்றில் நிலுவைத் தொகையில் 28 சதவீதம் ஆகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவைத் தொகையிலிருந்து ரூபா 153,543 இற்கான தொகையொன்று 2019 மார்ச் அளவில் அளவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள துடன் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு அதன் ஊடாக இனங்காணப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வ தற்கும் தொடர்ச்சியாக நிலுவைகள் காணப்படும் இடங்களில் உரிமையை திருப்பிப் பெறுவதற்கு மற்றும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

(ஆ) **நில வரி**

| | | |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை ரூபா 549,918 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 374,466 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடல் மற்றும் மிகைக் கட்டணத்துடன் ரூபா 924,384 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. மொத்த அறவீடு கள் ரூபா 289,189 தொகையாக காணப்பட்டமையால், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 635,195 தொகை நிலுவை மீதி காணப்பட்டது. மொத்த அறவீடுகள், சிட்டையிடல்களின் தொகையில் 31 சதவீதம் அளவில் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை நிலவரி அறவீடு செய்வதற்காகவும் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் கணிப்பீட்டு சபையின் தீர்மானம் 2019 மே மாதக் கூட்டத்தில் சமர்ப்பிக்கபட்டது. அதன் பிரகாரம் தேவையான தீர்மானங்கள் எடுக்கப்பட்டு நிலுவைத் தொகை அறவீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

**2.2.5 ஏனைய வருமானங்கள்**

**நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 3,913,906 தொகை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 24,944,563 தொகை முத்திரைக் கட்டணம் பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | AK/PS/02/03/07 மற்றும் 2019 ஜனவரி 02 திகதிய கடிதத்தின் மூலம் நிலுவை முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப் பணம் என்பவற்றை பெற்றுத் தருமாறு விண்ணப்பித் ததுடன் அதன் பிரகாரம் நீதி மன்றத் தண்டப் பணத்தில் ரூபா 2,032,673 தொகையும் முத்திரைக் கட்டணம் ரூபா 467,327 தொகை 2019 பெப்ரவரி 06 திகதி கிடைத்துள்ளன. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) துணை விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 1988 ஆகஸ்ட் 23 திகதிய 520/7 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட மீன் விற்பனை தொடர்பான துணை விதிகளைத் தழுவி இருந்தமையால் வருடாந்த டென்டர் மூலம் வழங்குவதற்கு பதிலாக அகுரஸ்ஸ பொதுச் சந்தையில் 07 கடைகள் ஒரு கடை மாதாந்தம் ரூபா 750 வீதம் மீன் விற்பனைக்காக வழங்கப்பட்டிருந்தது. | துணை விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | பொதுச் சந்தையில் 07 மீன் பலகைகள் நீண்ட கால வாடகை யின் கீழ் வழங்குவதற்கு முன்னர் இருந்த சபை தீர்மானம் எடுத்திருந்தது. எதிர்காலத்தில் சட்ட ரீதியான தன்மை தொடர்பாக கண்டறிந்து சபைக்கு அனுகூலமாக நடைமுறை ஒன்றை நோக்கி நகர்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | குப்பை வரி அறவீடு செய்வதற்காக 2002 ஆண்டு முதல் துணை விதிகள் ஆக்கப்பட்டிருந்த போதிலும் வைத்தியசாலைகள், தொழிற்சாலைகள், வீடுகள் மற்றும் மாமிச விற்பனை நிலையங்களில் இருந்து குப்பைகள் சேகரிப்பதற் காக வரித்தொகை ஒன்று அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | துணை விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | குப்பை வரி அறவீடு செய்ய வேண்டிய மட்டத்தில் இருந்த வர்த்தக நிலையங்கள் இன்மை யாலும் வீதவரி அறவிடும் பிரதேசத்தில் இருந்து சேகரிக்கப் படுவதனாலும் குப்பை வரி விதிக்க முடியாதுள்ளது. |

**(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆக்கப்பட்டுள்ள துணை விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகள் அனைத்தும் தொடர்பாகவும் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும் | அகுரஸ்ஸ பிரதேச சபையினால் 2018 ஆண்டிற் காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரித்திருக்க வில்லை. எனினும் 2019 ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரித்து தற்போது அந்த திட்டம் செயற்படு நிலையில் காணப்பட்டது. |

### (இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக சம்பளங்கள் மற்றும் படிகள், எரிபொருள் மற்றும் வாகனத் திருத்தங்களுக்காக ரூபா 4,967,104 இற்கான செலவுகள் மேற்கொண்டிருந்த போதிலும் சேகரிக்க ப்படும் குப்பையில் உக்காத குப்பை மாத்தறை மாநகர சபைக்கு சொந்தமான கொடவிலவில் அமைந்துள்ள குப்பை செயற்தளத்திற்கு ஒப்படைத்தல் நடைபெறுகின்றதுடன் உக்கக் கூடிய குப்பைகளை அகுரஸ்ஸ நகரில் தனியார் காணி ஒன்றிற்கு அகற்றப்படுகின்றது. | சேதனப் பசளை செயற்களத்தின் விடயங்கள் ஆரம்பிக்கப்பட்டு முறைப்படி குப்பை அகற்றப்பட வேண்டும். | சேதனப் பசளைக்க நுழைவதற்கு பயன்படுத்தப்படும் பாதையில் இரண்டு வாகனங்களுக்கு மாறுவதற்கு போதியளவு வசதிகள் காணப்படாமையால் பாதையை விரிவாக்கும் அலுவல்கள் முடிவடைந்தவுடன் சேதனப் பசளை செயற்கள அலுவல்கள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### (ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்க வில்லை. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் மற்றும் இலக்குகள் நெருங்குவதற்கு திட்டமிடப்பட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்த வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள் தொடர்பாக மக்கள் பிரதிநிதிகள் மற்றும் உத்தியோகத்தர்களை அறிவுத்தி சபையின் அதிகார பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக நீண்டகால திட்டங்கள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவரினால் பிரதேச சபைக்கு அனுப்பியிருந்த 05/02/01/10 இலக்கம் கொண்ட 2017 திசெம்பர் 04 திகதிய திட்டமிடல் சுற்றறிக்கையின் 27 ஆம் இலக்கத்தின் பிரகாரம் அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் தொடர்பாக வழக்குகள் தாக்கல் செய்தல் அதனோடு தொடர்புடைய அனைத்து விடயங்களுக்கான அதிகாரங்களும் சபைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் 2018 செப்தெம்பர் 18 திகதிய நகர அபிவிருத்தி அதிகார சபையின் மாத்தறை பிரதிப் பணிப்பாளர் (திட்டமிடல்) இன் கடிதத்தின் மூலம் சபைக்கு அறிவித்திருந்த 07 அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை நிறைவேற்றியிருக்காமை உறுதிப்படுத்தப்பட்டன. நிர்மாண வேலைகள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | அகுரஸ்ஸ நகர அதிகார பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 15 அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் தொடர்பாக சட்டரீதியாக நடவடிக்கை எடுத்திருக்காததுடன் தழுவு அங்கீகாரம் வழங்கக் கூடிய கட்டிடங்கள் தொடர்பாக கட்டணம் அறவீடு செய்து தழுவு அங்கீகாரம் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை நிறைவேற்றியிருக்காமை உறுதிப்படுத்தப்படின் நிர்மாண வேலைகள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பேன். |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 18 வெற்றிடங்களை நிரப்புவதற்கும், 08 மிகை பதவியணியினை முறைப்படுத்துவதற்கும் மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணியில் மிகை பதவிகள் முறைப்படுத்துவதற்கும் மற்றும் வெற்றிடங்களை நிரப்ப வேண்டும். | 2 வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளதுடன் ஏனைய வெற்றிடங்களை நிரப்புவதற்காக தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| **(ஆ) ஊழியர் கடன்** | | |
| சபையின் ஊழியர்கள் பதிவேட்டின் படி தவணைப் பணம் செலுத்துவதை புறக்கணித்துள்ள ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 163,003 தொகைக்கான நிலுவை கடன் மீதியை அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விரைவாக நிலுவைக் கடன் மீதி அறவிடப்பட வேண்டும். | கடன் மீதியில் 10 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 53,212 இற்கான கடனை முதலமைச்சரின் அங்கீகாரத்தின் கீழ் பதிவழிப்பதற்கும் 10 வருடங்களை விட குறைந்த ரூபா 280,387 இற்கான கடனை அறவீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

## 3.4 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2010 ஆண்டின் பின்னர் ஆதனங்களுக்கான வீதவரி பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளப்படாமையால் புதிய நிர்மாண வேலைகளில் இருந்து கட்டணம் அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | வீதவரிக்காக பெறுமதி மதிப்பீடு ஒன்று பெற்றுக் கொள்வதற்காக 2017 ஆண்டில் முதலமைச்சரின் அங்கீகாரத்தை பெற்றிருந்ததுடன் 2017 ஆண்டு முதல் வீதவரிக்காக பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளுமாறு பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தை வேண்டிய போதிலும் இது வரை அவ்வேலை நிறைவேற்றப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2010 திசெம்பர் 27 ஆம் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் தபபா/பபாகொ/2010/01 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் 05 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீட்டு வாடகைத் தொகை திருத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 2019 ஏப்ரல் 10 திகதி அளவில் 79 கடைகளில் 11 கடைகள் மாத்திரம் புதிய பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | பெறுமதி மதிப்பீட்டு காலம் முடிவடைந்துள்ள கடைகளின் பெறுமதி மதிப்பீடு மேற்கொள்வதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | மேற்கூறிய சுற்றறிக்கையின் பிரகாரம் ஒரே முறையில் செலுத்தும் பணம் கூடியது 06 மாதங்கள் என்ற அடிப்படையில் 06 மாதங்களுக்கு செலுத்தப்பட வேண்டும் எனினும் உடன்படிக்கைக் காலம் முடிவடைந்திருந்த 18 கடைகளில் இருந்து 2019 ஏப்ரல் 10 வரை ரூபா 4,736,848 இற்கான தொகை ஒன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த கடைகளில் 16 கடைகளின் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் நிலுவைகள் காணப்படும் ஏனைய கடைகளின் உரிமையையும் உரித்தாக்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |
| (ஈ) | 2005 ஆண்டின் போது நிர்மாண வேலைக பூர்த்தி செய்யப்பட்டிருந்த அகுரஸ்ஸ பொதுச் சந்தையில் 12 கடைகள் 13 வருடங்கள் முதல் டென்டர் பண்ணியிருக்காததுடன் நிர்மாணிக்கப்பட்டிருந்த 74 கடைகளுக்காக நுழை பாதைகள் தடைபடும் விதமாக அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் நுகர்வோர் சந்தைக்கு உள்வருதல் பலவீன மட்டத்தில் காணப்பட்டது. இதன் காரணமாக 41 கடைகள் 2019 ஏப்ரல் 10 திகதி அளவிலும் மூடப்பட்டு காணப்பட்டது. | தடைகளை நீக்கி டென்டர் பண்ணி வாடகைக்கு கொடுத்தல் வேண்டும். | 2005 ஆண்டில் டென்டர் பண்ணி வாடகைக்கு கொடுத்த கடைகளில் மீதியாகவுள்ள கடைகளை பல தடவை டென்டர் பண்ணியதுடன் வாடகைக்கு பெறுவதற்கு எவரும் முன்வரவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (உ) | நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிட்டிருந்த 1986 மார்ச் 16 ஆம் திகதிய 392/7 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் பிரகாரம் துணை பகிர்வு செய்யப்பட்ட 13 ஏக்கர் 2ரூட் 37.62 பர்சஸ் (வீதிகள் இன்றி) விதைக்கும் பரப்பை கொண்ட காணியில் சபைக்கு உரித்தாக்கப்பட வேண்டிய 01 ஏக்கர் 01 பர்சஸ் 19 காணிப் பகுதியில் 41.44 பர்சஸ் மாத்திரமே சபைக்கு கிடைத்திருந்தது. | வர்த்தமானியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | காணியின் துணை பகிர்வுக்காக அங்கீகாரம் வழங்கியிருந்தது. வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் இருந்ததால் அச் சட்டத்தில் சமூக மற்றும் களியாட்ட விடயங்களுக்காக ஒதுக்க வேண்டிய காணியின் அளவு அறுதியாக குறிப்பிடப்பட்டிருக்காமையால் 41.44 பர்சஸ் அளவு பெறப்பட்டுள்ளது. |
| (ஊ) | 2013 ஆண்டிற்கான பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சபை வளவில் வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்காக கராஜ் ஒன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 1,190,747 தொகை பெறுமதியான மதிப்பீடு உள்ளூராட்சி ஆணையாளரினால் பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் 2019 ஏப்ரல் 10 திகதி அளவிலும் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் ரூபா 61,360,772 தொகை பெறுமதியான 18 வாகனங்கள் வெயில் மற்றும் மழையினால் பாதிக்கப்பட்டு சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | நிர்மாண வேலை விரைவுபடுத்தப்பட வேண்டும். | சபை வளவில் மற்றும் தகனகூட அமைந்துள்ள வளவில் 02 வாகன முற்றங்கள் நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் கிடைத்தவுடன் அவற்றின் நிர்மாண வேலை ஆரம்பிப்பேன். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சொத்துக்களை ஆவணப்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த கூட்டுத் தொகை ரூபா 652,437 தொகைக்கு நிலையான சொத்துக்கள் ஆவணப்படுத்தியிருக்கவில்லை. | அனைத்து சொத்துக்களும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்த வேண்டும். | கொள்வனவு செய்திருந்த ஆனால் ஆவணப்படுத்தியிருக்காதிருந்த அனைத்து நிலையான சொத்துக்களும் 2019 ஆண்டில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.5.2 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தென் மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் இலக்கம் தபபா/15 மற்றும் 2007 மார்ச் 19 திகதி அறிவுரை கடிதத்தின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சொந்தமான அனைத்து ஆதனங்களினதும் பாதுகாப்பு உறுதிப்படுத்தி சிக்கல் நிலைமையில் உள்ள காணிகளை மீண்டும் அளவை செய்து எல்லைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை செய்ய வேண்டுமெனினும் சபைக்கு சொந்தமான 28 காணித் துண்டுகள் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | அறிவுரை கடிதத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | சபைக்கு சொந்தமான காணிகளில் உரிமையினை தீர்த்துக் கொள்வதற்காக காணி உறுதிகள் மற்றும் வண்டிகள் தயாரிக்கும் விடயங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் காணிகளின் உரிமையை தீர்த்த பின்னர் எல்லை வேலிகள் போடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 05 காணித் துண்டுகளில் தனியார் தரப்பினரினால் அங்கீகாரம் இன்றி கடைகள் நிர்மாணித்து ஆதனங்களை அனுபவித்துக் கொண்டு வருவதுடன் அங்கீகாரமற்ற நிர்மாணவேலைகள் தொடர்பாக சபையினால் எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | விரைவாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபைக்குச் சொந்தமான காணித் துண்டுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் கண்டறிந்து அகற்றுவதற்கு தேவையான செயற்பாடுகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.5.3 விளைவற்ற/ குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | எதுவித பயன்தரு விடயங்களுக்கு ஈடுபடுத்தப்படாமல் காணப்பட்ட சபைக்குச் சொந்தமான 16 காணிகளில் இருந்தும் விளைச்சல் வரி அல்லது வருடாந்த வாடகைக்கு வழங்கி மேலதிக வருமானம் ஒன்றினை பெறுவது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை. | ஆக்கபூர்வமான கருமங்களுக்கு ஈடுபடுத்தல் அல்லது பயன்படுத்த முடியாதெனின் அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டின் போது சபைக்கு சொந்தமான 04 காணிகளை வருடாந்த வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபைக்கு சொந்தமான ரூபா 645,000 தொகை பெறுமதியான டிரக்டர் மற்றும் ரூபா 1,310,000 தொகை பெறுமதியான டபள் கப் வண்டி 03 வருடங்களை விட கூடுதலான காலம் முதல் விளைவற்றுக் காணப்பட்டதுடன் திறைசேரி செயலாளரின் 2015 ஜூன் 10 திகதிய 2/2015 ஆம் இலக்க அரசு நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆக்கபூர்வமான கருமங்களுக்கு ஈடுபடுத்தல் அல்லது பயன் படுத்த முடியா தெனின் அப்புற ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இயந்திரப் பொறியியலாள ரிடம் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை ஒன்று பெற்றுள் ளதுடன் ஏல விற்பனை செய்வதற்காக நடவடிக்கை எடுக்கின்றேன். |

**3.6 பெறுகை**

**3.6.1 பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பெறுகைத் திட்டம் ஒன்று இன்றி ஆண்டின் போது கொள்வனவு செய்வதற்காக ரூபா 6,229,228 தொகை செலவிடப்பட்டுள்ளது. | வருடாந்த பெறுகை திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | 2018 ஆண்டிற்கு பெறுகை திட்டமொன்று தயாரித்திருக்காத துடன் 2019 ஆண்டிற்கான பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 07 செலவு விடயங்களில் சேமிப்புக் களின் கூட்டுத்தொகை ரூபா 12,924,995 தொகையாகக் காணப் பட்டதுடன் அப்பெறுமதிகள் 1 சதவீதம் முதல் 85 சதவீதம் வரை யான வீச்சில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமான முறையில் வருடாந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் பாதீடு தயாரிக்கும் போது கவனம் செலுத்துகின்றேன் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 03 வருமான விடயங்களை நெருங்கியிருக்காத இலக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 13,706,823 தொகையாக இருந்ததுடன், அவை 26 முதல் 58 சதவீத இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமான முறையில் வருடாந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் பாதீடு தயாரிக்கும் போது கவனம் செலுத்துகின்றேன் |

## 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| 2009 ஜுன் 09 ஆம் திகதிய DMA/2009(i) இலக்கம் கொண்ட முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் நிறுவப் பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை 01 கூட்டம் மாத்திரம் கூடியிருந்தது. | சுற்றறிக்கை யின் பிரகாரம் செயற்பட வேண்டும். | இந்த வருடம் முதல் கணக்காய்வு முகாமைத்துவக் குழு முறைப் பிரகாரம் நடத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |